# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2336/48 - 2023 ජුනි මස 14 වැනි බදාදා - 2023.06.14

*2336/48 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (XV)*(சி)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும் (காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான) 1986 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 420/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை (2017 ஆம் ஆண்டின் சனவரி 18 ஆந் திகதிய 2002/35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அவ்அட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "தொழில்நுட்ப பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற "பல்துறைக் கற்கைநெறிகள் துறை" எனும் பதிவை உடனடுத்துப் பின்வரும் பதிவைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை**

*"3. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை".*

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2023, யூன் 12.*

EOG *06-0104*


1A - PG 6350 — 457 (2023/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*